நிகழ்வினை எடுத்திருக்கிறேன். தினம் ஒன்று எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுக்கிறேன், இருங்கள். பதில் வரட்டும், நான் எடுக்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். நான் பதில் வந்தவுடன் எடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

6. கவன ஈர்ப்பு

உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. இரா. அண்ணாதுரை மற்றும் திரு. ஆர். ராமமூர்த்தி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையில் இல்லை. அதற்கெல்லாம் அவையில் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்திரு. துரைமுருகன் புரிந்துகொள்ள வேண்டும். காலையில் 9–45 மணிக்குத்தான் உங்கள் உறுப்பினர் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். நான் பதில் கேட்டு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் அதனை எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)9–45 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு இப்போது கேட்டால் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) 9–45 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு 10–00 மணிக்கு அவையில் எழுப்பினால் நான் என்ன செய்ய முடியும்? எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? நீங்களும் அமைச்சராக, இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அப்படி இருக்கும்போது உங்களது கட்சி உறுப்பினரை நீங்கள் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்பு